# வவுனியா, உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பம் கோரல்

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்- கல்வி ஆண்டு 2017
(விண்ணப்ப முடிவுத் திகதி : 2017.02.28)

2016 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிருந்து இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமாவிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் முறை.- கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு முறையாக ஆங்கிலத்தில் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், கணக்கு இல. 025-2-001-1-3397613 மக்கள் வங்கி, ஹைட் பார்க் கிளை (கொழும்பு) அல்லது வேறேதேனும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 500 (ஐந்நூறு)ஐ பற்று வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், “ கல்வி இணைப்பாளர், உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம், A9 வீதி, வேப்பங்குளம்,ஓழந்தை, வவுனியா” எனும் முகவரிக்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும். “விண்ணப்பிக்கும் பாடநெறியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேணடும்”. ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூபா 500 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த வேறு கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதியான 2017.02.28 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிட்டுள்ள பாடநெறிப் பட்டியலிலிருந்து தமது தகைமைக்கேற்றவாறு பாடநெறிகளைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

விரிவுரைகளின் வகை :
முழுநேர பாடநெறிகள் (Full Time) : வாரநாட்கள்
பகுதி நேர பாடநெறிகள் (Part Time) : வார இறுதி நாட்கள்
மொழிமூலம் : ஆங்கிலம்
உரிய துறைகளில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள்

**பாடநெறிக் கட்டணங்கள்.-**
முழு நேர பாடநெறிகளுக்கு எவ்வித பாடநெறிக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
பகுதிநேர பாடநெறிகளுக்கான தவணைக் கட்டணங்கள் (Semester) பின்வருமாறு :
கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) ரூபா 5,000.
ஆங்கிலம் உயர் தேசிய டிப்ளோமா (HND in English) ரூபா 8,000.

நேர்முகப் பரீட்சை.- தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். மாணவர்களின் தேர்வுகள், க. பொ. த. (உ/த) பரீட்சை மொத்தப் புள்ளிகள் மற்றும் “ Z புள்ளிகளை” அடிப்படையாகக் கொண்டே நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள் பற்றி அறிவிக்கப்படும். சமர்ப்பிக்கப்படாதபோது பாடநெறி பதிவின்போது மூல ஆவணங்களை சமர்ப்பிக்கபடாத பட்சத்தில் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா – “HNDA” (முழுநேரம்) - 4 வருடங்கள்**
விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-
(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் வணிகப் புள்ளிவிபரவியல், இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இப்பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணித பாடத்தில் திறமை சித்தி பெற்றிருப்பின் மேற்கூறிய பாடங்களில் ஏதேனுமொன்றின் திறமைச் சித்திக்கு மாற்றீடாக கருத்தில் கொள்ளப்படும். அல்லது
(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அத்துடன்
(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா – “HNDA” (பகுதிநேரம்) - 4 வருடங்கள்**
விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-
(i) க.பொ.த. (உ.த.) பழைய பாடத்திட்டமெனில் நான்கு பாடங்களிலும், புதிய பாடத்திட்டமெனில் மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் அல்லது
(ii) உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் அல்லது
(iii) உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபார கல்விகள் (கணக்கியல் குழு) தேசிய சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தேசிய சான்றிதழை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அத்துடன் செயன்முறை அனுபவம்.- விண்ணப்பதாரி அரசாங்க நிறுவனம்/ பொது நிறுவனங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சேவையாற்றுதல் வேண்டும்.
(iv) பின்வரும் தகைமை கொண்டுள்ளோர் முதலாம் ஆண்டில் விலக்களிக்கப்படுவர். அத்துடன் இட வசதிக்கும் தகைமைக்கும் இணங்க இரண்டாம் ஆண்டிற்கு அனுமதிக்கப்படுவார்கள் :-

- உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வியாபார கல்வி நிர்வாகம்/ வியாபார நிதி/ தேசிய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல்.
- உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட வியாபார நிர்வாகம்/ வியாபார நிதி முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமாவைப் பூர்த்திசெய்திருத்தல் உயர் தொழில்நுடப்க் கல்வி நிறுவகம் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிச் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வர்த்தக உயர் தேசிய டிப்ளோமாவில் இரண்டாம் ஆண்டைப் பூர்த்திசெய்திருத்தல்.
- கீழ்க்குறிப்பிடப்பட்ட உரிய துறையில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருத்தல் (கணக்கியல்/வியாபார நிருவாகம்/வர்த்தகமாணி (பிகொம்) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/மனிதவள முகாமைத்துவம்/ வியாபார நிதி/வியாபார பொருளியல்.
- ““ஐசீஎஸ்எல்” பாகம் I மற்றும் II பூர்த்திசெய்திருத்தல் (ICA-SL).
- ““சீஐஎம்ஏ”” பாகம் I மற்றும் II பூர்த்திசெய்திருத்தல் (CIMA-UK).
- ““ஏஏரீ”” பூர்த்திசெய்திருத்தல் (AAT-SL).
- ““சீஎம்ஏ”” பூர்த்திசெய்திருத்தல் (CMA-SL).

**தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- “HNDIT” (முழு நேரம்) 2½ வருடங்கள்**
விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(i)க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்
(ii)கபொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்

**ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா ''HND English" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 வருடங்கள்**
விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(i)க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருப்பதுடன்
(ii)க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்திலோ அல்லது ஆங்கில இலக்கியத்திலோ திறமைச் சித்தி பெற்றிருத்தல். அல்லது கல்வியியல் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

அல்லது

(iii)க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருப்பதுடன் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் மேலும் கல்விக்கான ஆங்கில தேசிய சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

**குறிப்பு.-** பகுதிநேர விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட தகைமைகளுடன் கூடிய ஏதேனும் துறையில் நிரந்தர சேவையாற்றுதல் வேண்டும். க.பொ.த. (உ.த.) புதிய பாடத்திட்டத்தில் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகள் பொதுஅறிவு பரீட்சையில் கட்டாயம் சித்தி பெற்றிருத்தல் அவசியம். 23 வயதிற்குட்பட்டோருக்கு பகல் நேர பாடநெறிக்கான முன்னுரிமை வழங்கப்படும்.

முகவரி: கல்வி இணைப்பாளர்,
உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்,
A9 வீதி, வேப்பங்குளம்,
ஓழந்தை. வவுனியா